**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 18.07.2025**

**O.S. 208/2007**

வா.சா. 2 – **நல்லபெருமாள் பிள்ளை**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

எனது ஊர் சுசீந்திரம் எனது ஊருக்கும் குலசேரபுரத்திற்கும் சுமார் 8.கி.மீ துரம் இருக்கும் என்றால் சரியல்ல சுமார் 5 கி.மீ இருக்கும் நான் பூர்வீகமாகவே சுசீந்திரத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். குலசேரபுரத்தில் இருக்கும் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எத்தனை வருடமாக இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரிந்து சுமார் 50 வருடத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. மேற்படி கோவிலை கட்டியது யார் என்று தெரியுமா என்றால் குடும்ப முன்னோர்கள் கட்டினார்கள் குறிப்பாக பெயர் ஞாயாபகம் இல்லை. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் என்ன சர்வே நம்பரில் இருக்கிறது என்றால் சர்வே நம்பர் இல்லை புறம்போக்கு நிலத்தில் தான் உள்ளது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் குலசேகரபுரம் வில்லேஜில் சர்வே எண்.224/12 ல் உள்ளது அது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலும் அதன் முன்பு இருக்கும் தகனமேடை சேர்த்து எத்தனை சென்ட் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில்

முன்பாக இருக்கும் தென்னந்தோப்பு கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் முன்பாக இருக்கும் தென்னந்தோப்பு குலசேகரபுரம் வில்லேஜில் சர்வே எண்.224/11 ல் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலில் 15 லட்சம் ரூபாய் செலவு செய்து கல்வெட்டு வைத்திருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலில் இருக்கும் சாமிக்கும் கோவிலுக்கு முன்பாக தகனமேடைக்கும் சுமார் எத்தனை அடி தூரம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலில் மொத்தம் எத்தனை தெய்வங்கள் இருக்கிறார்கள் என்றால் நான்கு தெய்வங்கள். குலசேகரபுரம் ஊரில் யாரேனும் இறந்து விட்டால் கோவிலுக்கு முன்பாக இருக்கும் தகனமேடையில் தான் தகனம் செய்வார்கள் என்றால் சரிதான்.

குலசேகரபுரம் ஊரில் வெள்ளாளர் சமுதாயத்தில் யாரேனும் இறந்து விட்டால் வெள்ளாளர் சமுதாய குலசேகர நங்கை அம்மன் டிரெஸ்டில் அனுமதி பெற்றுதான் தகனம் செய்வார்கள் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு பட்டிகை சொத்து ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலில் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை கொடை நடக்கும் என்றால் சரிதான். இதற்கு

முன்பாக நடந்த கொடை விழாக்கள் அனைத்தையும் வெள்ளாளர் சமுதாய குலசேகர நங்கை அம்மன் டிரெஸ்டில் இருக்கும் உறுப்பினர்கள் தான் நடத்தினார்கள் என்றால் ஞாபகம் இல்லை. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எனது குடும்பத்தாருக்கு பாத்திய்பபட்டது என்று எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணங்கள் பார்த்ததில்லை.

எனது குடும்ப உறுப்பினர்கள் மேற்படி கோவிலில் சாமி இருக்கும் இடத்தையும் அதற்கு முன்பாக இருக்கும் சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் வாங்கியதாக ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் ஏதும் கிடையாது. எனக்கு தற்போது 65 வயதாகிறது. வயதை காண்பிப்பதற்காக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்யலாம் ஆதார்கார்டு உள்ளது. 50 வருடத்திற்கு முன்பாக குலசேகரபுரம் டிரெஸ்டு எதுவும் இல்லை, வரியும் கொடுக்கவில்லை, தற்போதும் வரிஎதுவும் கிடையாது என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவிலின் கணக்கு வழக்குகளை நான் தான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவிலின் கணக்கு வழக்குகளை நான் தான் பராமரித்து வருவதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவில் எனது குடம்பத்தாருக்கு பாத்தியப்பட்டது என்பதை

காட்டுவதற்கு எவ்வித வருவாய் துறை ஆவணங்களும், பட்டா, அ-பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவில் வெள்ளாளர் சமுதாய நங்கையம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட கோவில் என்பதால் மேற்படி ஆவணங்கள் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஆகையால் நான் முதல் விசாரணையில் மேற்படி கோவில் குடும்பத்தாருக்கு உரிமைப்பட்டது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து வாயிலாகுளம் அருகில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வயலின் குத்தகை தாரர் யார் என்று தெரியுமா என்றால் தெரியும் தாணுபிள்ளை என்பர். தாணுபிள்ளை என்பவருக்கு யார் குத்தகைக்கு கொடுத்தார், எந்த வருடம் குத்தகைக்கு கொடுத்தார், குத்தகைக்கு கொடுத்தபின் எவ்வளவு பாட்டம் கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாணுபிள்ளை என்பர் வாதியின் தகப்பனார் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் வெள்ளாளர் சமுதாய நங்கையம்மன் டிரெஸ்டிடம் இருந்து தான் வழக்கு பட்டிகை சொத்தை குத்தகைக்கு வாங்கினார் என்றால் சரியல்ல. தாணுபிள்ளை என்பவருக்கு யார் குத்தகைக்கு கொடுத்தார், எந்த வருடம் குத்தகைக்கு கொடுத்தார், குத்தகைக்கு கொடுத்தபின் எவ்வளவு பாட்டம் கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

நான் 2007ம் வருடம் ஒரு டிரெஸ்டு ஆரம்பித்தேன் அது வழிபாட்டு குழு பரம்பரை டிரெஸ்டு என்றால் சரிதான். கோவிலை நிர்வகிப்பதற்காக நிர்வாக டிரெஸ்டு எதுவும் எனது குடும்பத்தார்கள் தொடங்கவில்லை என்றால் சரிதான். தாணுபிள்ளை யாரிடம் பாட்டம் கொடுத்தார் என்பது பற்றி தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாணுபிள்ளை எப்போது இறந்தார் என்றால் சுமார் 15 வருடம் இருக்கும். தாணுபிள்ளைக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 5 ஆண்மகன்கள் 3 பெண் மக்கள். தாணுபிள்ளை இறப்பதற்கு முன்பாக எத்தனை வருடத்திற்கு அவர் கைவசம் வயல் இருந்தது என்றால் இறக்கும்வரையிலும் அவர் கைவசம் தான் இருந்தது. தாணுபிள்ளை இறக்கும்வரை பாட்டநெல் யாரிடம் கொடுத்தார் என்றால் தாணுபிள்ளை தான் கைவசம் வைத்திருந்தார்.

நான் வழிபாட்டு குழு பரம்பரை டிரெஸ்டில் 2007லிருந்து தற்போது வரையிலும் பொருளாளராக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து குறித்துள்ள சாமிபெயரில் உள்ள விலையாதாரங்கள், நன்கொடை ஆதாரங்கள், செற்றில்மெண்ட் ஆதாரங்கள் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. வயிலின் பாட்டநெல்லை நான் தான் வாங்கினேன் என்றால் சரிதான். எனது பெயருக்கோ, வழிபாட்டு குழு பரம்பரை டிரெஸ்டு பெயருக்கோ எவ்வித ஆவணமும் இல்லாமல் பட்டிகை சொத்தின் பாட்டநெல்லை வாங்குவதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தின் பாட்டநெல் வெள்ளாளர் சமுதாய நங்கையம்மன் டிரெஸ்டு குலசேரபுரம் ஊர்வகை டிரெஸ்டுக்கு போக வேண்டிய பாட்டநெல் அதை நான் வாங்குவதற்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பாட்டநெல்லை டிரெஸ்டுக்கு கொடுக்காததால் வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கான பாட்ட நெல்லை வாங்கி எனது கைவசம் வைத்து வாதியுடன் சேர்ந்து பிரதிவாதி வெள்ளாளர் சமுதாய நங்கையம்மன் டிரெஸ்டை ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலில் பூஜை வைக்கும் நபர் யார் என்றால் பேச்சிநாதபிள்ளை. பேச்சிநாதபிள்ளையின் ஊர் தோவாளை என்றால் சரிதான். தோவாளைக்கும் குலசேகரபுரம் ஊருக்கும் இடையே 12 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலில் பூஜை வைப்பது பேச்சிநாதபிள்ளை இல்லை வெள்ளாளர் சமுதாய நங்கையம்மன் டிரெஸ்டு என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் சர்வே எண்.224/12 மற்றும் அதன் முன்பு இருக்கும் தென்னந்தோப்பு சர்வே எண். 224/11 ம் சொத்துக்களும் குலசேகரபுரம் நங்கையம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் இருக்கலாம். குலசேகரபுரம் நங்கையம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தான் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி

கோவில் சர்வே எண்.224/12 மற்றும் அதன் முன்பு இருக்கும் தென்னந்தோப்பு சர்வே எண். 224/11 ம் சொத்துக்களும் இருக்கிறது என்றால் சரியல்ல.

குலசேகரபுரம் நங்கையம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தான் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் சர்வே எண்.224/12 மற்றும் அதன் முன்பு இருக்கும் தென்னந்தோப்பு சர்வே எண். 224/11 ம் சொத்துக்களும் இருப்பதால் ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவில் குலசேகரபுரம் நங்கையம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் பிரதிவாதிகளின் டிரெஸ்டுக்கு பாத்தியப்பட்டதால் வழக்கு பட்டிகை சொத்தும் பிரதிவாகளின் டிரெஸ்டுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் குலசேகரபுரம் நங்கையம்மன் கோவிலுக்கு வரிசெலுத்தி வரும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எனது கைவசம் வைத்து நிர்வகித்து வருவதற்கான எவ்வித ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி டிரெஸ்டுக்கு வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக எவ்வித பாட்டமும் கொடுக்காமல் வழக்கு பட்டிகை சொத்தின் மீதுள்ள டிரெஸ்டின் உரிமையை மறுத்து வருவதாலும் இந்த வழக்கில் கோரிய பரிகாரங்கள் ஏதும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி எனது மைத்துனர் என்றால் சரிதான். வாதி என்னுடைய மைத்துனர் என்பதால் அவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**